[திரு. அ. பிரபு] [2017 ஜூலை 11

மின்சாரம் தரக்கூடிய தனி feeder–ம் உள்ளது. உலகத்தான் ஊராட்சியின் அருகிலே by–pass சாலையும் இருக்கிறது. அந்தப் பகுதியைத் தேர்வு செய்தால், துணை மின் நிலையம் அமைக்க மிகவும் சுலபமாக இருக்கும். S.E., அலுவலகத்தையும் அதே இடத்தில் அமைத்துவிடலாம். Private land கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். இடத்தைத் தேர்வு செய்வதற்கு நான் C.E., S.E.–யுடன் செல்கிறேன். எனவே, இந்தப் பகுதியைத் தேர்வு செய்தால் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில், ஏற்கெனவே பெருவங்கூர் ஊராட்சியிலே 3½ ஏக்கர் இடம்தான் இருக்கின்றது. ஆனால் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் 5 ஏக்கர் நிலம் வேண்டும். அந்தப் புதிய பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாரிடம் கேட்டு, நிலம் பெற்றுத் தருவதாகச் சொல்கின்றார். அப்படி நிலம் கிடைக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருவண்ணாமலை, மலையடிவாரம், சில வார்டுகளில் பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு அனுமதித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். "திருவண்ணாமலை மலையடிவாரத்தில்

உள்ள சில வார்டுப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திக்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிப்பதற்கு விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றி 13 கிலோ மீட்டர் சுற்றளவில் கிரிவலப் பாதையில், ஐந்து மீட்டர் உயரத்திற்குமேல் எவ்வகையான கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்வதைத் தடை செய்தல் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் அருணாச்சல கிரிபிரதட்சண சமிதி மற்றும் சிலரால் தொடரப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்றம் தனது 4–5–1999 ஆம் நாளிட்ட ஆணையில், நீதியரசர் திரு. ட்டி.எஸ். அருணாசலம் அவர்களின் தலைமையில் 23 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பு ஒருங்கிணைப்புக் குழு ஒன்றினை ஏற்படுத்தியிருந்தது. உள்ளூர் பகுதி குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்து திருவண்ணாமலை நகராட்சி ஆணையரால் உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 6126–6130/2005–ல் 3–10–2005 ஆம் நாளிட்ட ஆணையில் மேற்கண்ட உயர் நீதிமன்ற ஆணைக்குத் தடையாணை பெறப்பட்டது.

ஜூலை 2005–ல் திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த, விரிவான உறுதி ஆவணத்தைப் பார்வையிட்ட உச்ச நீதிமன்றம், உறுதி ஆவணத்தில் தெரிவித்துள்ளவாறு மேம்பாட்டுப் பணிகள், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவற்றை நீதியரசர் திரு. ட்டி.எஸ். அருணாசலம் அவர்களைக் கலந்தாலோசித்து மேற்கொள்ளலாம் என 3–10–2005 ஆம் நாளிட்ட ஆணையில் இவ்வழக்கைத் தீர்வு செய்தது.

எதிர்மனுதாரர்கள், ஜூலை 2005 உறுதி ஆவணத்தில் உத்தேசித்துள்ளபடியான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதுடன், ஓய்வுபெற்ற மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர் ஆலோசனையுடன் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் பொருத்தமாக இருக்கும் என தெரிவித்தனர்.

மத்திய அரசு திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலை தேசிய நினைவுச் சின்னமாக அறிவித்து, 20–9–2002 அன்று வெளியிட்ட அறிவிக்கையினை திரும்பப் பெற்றதையும் உச்ச நீதிமன்றம் பதிவு செய்தது.

நீதியரசர் திரு. டி.எஸ். அருணாசலம் அவர்கள் சொந்தக் காரணங்களுக்காக மேற்காணும் கலந்தாலோசனைப் பணியில் பங்கேற்க இயலாது என உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள்.

உறுதி ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை ஏற்ற உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்தின் 4–5–1999 நாளிட்ட ஆணையினைத் தள்ளுபடி செய்தது. மேலும், உறுதி ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகராட்சி நடவடிக்கைகளை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு. கே. வேங்கடசாமி அவர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளுமாறு ஆணையிட்டது.

இதனைத் தொடர்ந்து ஓய்வுபெற்ற மாண்பமை நீதியரசர் கே. வேங்கடசாமி அவர்கள் 2008 ஆம் ஆண்டில் 5 முறை ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி தேவையான மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் விவாதித்தார்கள். 5–வது கூட்டம் 9–9–2008 அன்று நடைபெற்றது. அதன்பின்னர், நீதியரசர் கே. வேங்கடசாமி அவர்கள் 26–9–2008 அன்று மரணமடைந்ததைத் தொடர்ந்து கூட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை.

எனவே, அருணாசலேஸ்வரர் கிரிவலப் பாதையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மறைந்த ஓய்வுபெற்ற மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர் கே. வேங்கடசாமி அவர்களுக்குப் பதில் வேறு ஒரு நீதியரசரை கலந்தறிதற்குரியர் (Consultant) ஆக நியமனம் செய்ய வேண்டி அப்போதைய மாவட்ட ஆட்சியர் உச்ச நீதிமன்றத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளார். உச்ச நீதிமன்றத்தின் பதிலுரை எதிர்பார்க்கப்படுகிறது.

2017 ஜூலை 11] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

திருவண்ணாமலையில், வார்டு எண்கள் 1, 3, 4, 5, 6, 7, 24 மற்றும் 26 ஆகியவை மேற்காணும் கிரிவலப் பாதைப் பகுதியில் அமைந்துள்ளதால் உச்ச நீதிமன்றத்தின் பதிலுரை பெறப்பட்ட பின்னர் அவ்விடத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்து அரசால் பரிசீலிக்க இயலும் என்ற நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். ஆனால், என்னால் பரவசம் அடைய முடியவில்லை. காரணம், திருவண்ணாமலை நகரம், மலையடிவாரத்தின் கிழக்குப் பகுதியிலே சுமார் 6,000–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இந்த இடம், தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறைக்குப் பாத்தியப்பட்ட இடமாகும். இந்த இடத்தில் வீடு கட்டி வசித்து வருபவர்கள் அனைவரும் மிகவும் ஏழைகள், அடித்தட்டு மக்கள். இவர்கள் கூலி வேலை செய்து, தெருவோரம் மற்றும் கோயில் பகுதியிலே சிறிய, சிறிய கடைகளை அமைத்து வியாபாரம் செய்து பிழைப்பவர்கள். இதுவரையில் இவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. ஆனால், இவர்கள் அனைவரும் வீட்டு வரி கட்டுகிறார்கள்; நகராட்சி குடிநீருக்கான கட்டணத்தையும் கட்டுகிறார்கள். 30 ஆண்டுக் காலமாக இந்தப் பகுதியிலே வீடு கட்டி வசித்து வருகிறார்கள். அரசு இந்த இடத்தை அவர்கள் வாழ்வதற்கு அங்கீகரித்த காரணத்தினால்தான், 1, 3, 4, 5, 6, 7, 24 மற்றும் 26 ஆகிய 8 வார்டுகளாகப் பிரித்து, நகராட்சித் தேர்தல்களிலே பங்குபெற்று, அவர்கள் தொடர்ந்து நகராட்சித் தேர்தலிலே பங்கு பெறுகிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, பொதுத் தேர்தல்களான நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தல் வாக்காளர் பட்டியலிலே இடம் பெற்று, பொதுத் தேர்தலிலும் அவர்கள் கலந்துகொள்கிறார்கள். இது தவிர, சென்னை, உயர் நீதிமன்ற அரசர்கள், அந்தப் பகுதியில் வசிப்பவர்களின் கோரிக்கை நியாயமானது என்று எண்ணிய காரணத்தினால், வழக்கு எண் W.P.No.7135/2014, நாள் 12–9–2014–ல் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க உத்தரவும் வழங்கப்பட்டு, அந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு மின்னிணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மலையடிவாரத்தைப் பொறுத்தவரையில், காப்புக் காட்டுப் பகுதி–Reserve forest பகுதியாக இருக்கிறது.

[திரு. எ.வ. வேலு] [2017 ஜூலை 11

இன்னொரு பகுதி அறநிலையத் துறைக்குச் சொந்தமான பகுதி. பெரும்பான்மையான பகுதி வருவாய்த் துறைக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தினால், இதில் 6,000 பேர் வீடு கட்டலாம் என்று சொன்னாலும் அதற்கு மாற்று வழியில்லை. ஏனென்று சொன்னால், திருவண்ணாமலையைப் பொறுத்த அளவிற்கு அமெரிக்கா, ஜெர்மன், லண்டன் சுவிட்சர்லாந்து போன்ற வெளிநாட்டுக்காரர்கள் கிரிவலப் பாதையில் பெருமளவுக்கு நிதி செலவிட்டு பங்களாக்கள் கட்டிக்கொண்ட காரணத்தினால், அவர்களை வேறு எங்கும் அரசாங்கம் குடியமர்த்தவும் முடியாது. அப்படிப்பட்ட நிலையில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி, மலைப் பகுதியில் வாழ்கின்ற பச்சையம்மன் கோயில் முதல் இரமணேஸ்வரம் வரையுள்ள இடம் வருவாய்த் துறைக்குச் சொந்தமான பகுதிகளாகும். எனவே, அவர்களுக்குப் பட்டா வழங்குவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை நான் மீண்டும் ஈர்க்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல்கள் அனைத்தும் உண்மைதான். திருவண்ணாமலையில், 1, 3, 4, 5, 6, 7, 24 மற்றும் 26 ஆகிய அனைத்து வார்டுகளும் கிரிவலப் பாதையில் அமைந்துள்ளன. உச்ச நீதிமன்றத்தினுடைய வழக்குகளின்மூலம் பலமுறை பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிலே கடைசியாக உச்ச நீதிமன்றத்தினுடைய பதிலுரையைப் பெறுவதற்காக நடவடிக்கையில் இருக்கிறது. ஆகவே, உச்ச நீதிமன்றத்தினுடைய பதிலுரை பெறப்பட்ட பின்னர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, அதுதான் கேள்வியை விரிவாகக் கேட்டு வீட்டீர்களே, பிறகு என்ன? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

திரு. எ.வ. வேலு: இது ஒரு பொதுப் பிரச்சினை. இங்கே இருக்கிற மொத்த பேரும் திருவண்ணாமலை கோயிலுக்குதான் வருகிறீர்கள். அதைப்பற்றிச் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது முழுக்க முழுக்க உண்மைதான். அதில், ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. கிரிவலப் பாதை மற்றும் மலைப் பாதையில், கட்டடங்கள் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதால் தனி நபர் ஒருவரால் W.P.No.7396400/98 எண் கொண்ட வழக்கு தொடுக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தால் 50 மீட்டர் சுற்றளவிற்கு அபிவிருத்திக் கட்டடங்கள் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்று 22–10–1998 அன்று உத்தரவு போடப்பட்டது. அதன்மீது, உயர் நீதிமன்றத்தாலே 4–5–1999 நீதியரசர் திரு. ட்டி.எஸ். அருணாசலம் அவர்களின் தலைமையில் Expert Body ஒன்று அமைத்து, உயர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கச் சொன்னார்கள். அதன்பேரில், திருவண்ணாமலை நகர மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டுமென்று உயர் நீதிமன்றம் 11–5–2001–ல் தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் S.L.P. Nos. 12443–12447/2005–ல் நகராட்சி மேல்முறையீடு செய்தது. உச்ச நீதிமன்ற உத்தரவில், தமிழ்நாடு அரசாணை எண் 36, நகராட்சி நிருவாகம், நாள் 26–3–2002–ல் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் wide base committee அமைக்கப்பட்டு, 12–5–2002–ல் கூடியது. இதற்கிடையில் அப்போது டெல்லியில் மத்திய அமைச்சராக இருந்த திரு. ஜக்மோகன் என்பவர், அருணாசலேஸ்வரர் கோயிலையும் அந்த அடிவாரத்தையும் தொல்லியல் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முயற்சி செய்து, தொல்லியல் துறை எடுத்து Gazette notification வெளியிடப்பட்டுவிட்டது. அதற்குப் பின்னர், நான் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்தும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அருமை அண்ணன் தளபதி அவர்களிடத்திலே சொல்லி, அப்போதைய மத்திய அமைச்சர் திரு. ஜெயபால் ரெட்டி அவர்களோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, இவ்வாறு செய்வதால் திருவண்ணாமலை காட்சிப் பொருளாக மாறிவிடும், திருவண்ணாமலைக்கு வரும் ஆன்மிக பெருமக்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள் என்று ஆறு மாதக் காலத்தில் ஒரு முறைக்கு மூன்று முறை என்னுடைய சொந்தச்

செலவிலே நான் டெல்லிக்குச் சென்று திரு. ஜெயபால் ரெட்டி அவர்களைச் சந்தித்து, எடுத்துச் சொன்னேன். அதன் விளைவாக, அதிகாரிகளையும், சட்டத் துறை அதிகாரிகளையும் அழைத்து அந்த Gazette Notification–ஐத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அந்த Gazette notification இருந்த நிலையில்தான் உயர் நீதிமன்றத்தில் ஒருபுறம் அண்ணாமலையார் கோயிலையும், அடிவாரத்தையும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடியுங்கள். நேரமாகின்றது.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இது முக்கியமான விஷயம். தொல்லியல் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அந்த நிலையில்தான் அப்படி போடப்பட்டது. ஆனால் மத்திய அரசாங்கம், எங்களிடம் பணமுமில்லை, அது தேவையுமில்லை, அது வேண்டாமென்று தற்போது* Gazette notification*–லிருந்து எடுத்துவிட்டார்கள். ஆன்மிகத்திற்கே மக்கள் வைத்துக்கொள்ளலாமென்ற நிலை வந்துவிட்டது. இந்த நிலையில், நீதியரசர் திரு. வேங்கடசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை சுப்ரீம் கோர்ட் அமைத்து, அக்குழுவின் 5 கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றன. பின்னர் அவர் இறந்துவிட்டார் என்பதுதான் தற்போதைய நிலைமை. அதனால், அந்தக் கமிட்டியும் தற்போது இயங்கவில்லை. எனவே, இம்மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கக்கூடிய காரணத்தால், நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், சுப்ரீம் கோர்ட் வழக்கில் அரசு இணைந்து அந்த வழக்கை நடத்தவேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். மக்கள் பிரதிநிதி என்கிற பேரில், இந்த வழக்கிலே என்னையும் இணைத்துக்கொண்டு, நாங்களும் வக்கீல் வைத்து, மக்களுக்குப் பட்டா வாங்கிக் கொடுப்பதற்காக ஒரு* direction *வாங்கலாம் என்று நினைக்கிறேன்.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, இவ்வழக்கிலே நம்மை இணைத்துக்கொண்டு, அப்பகுதிவாழ் 6,000 பேருக்குப் பட்டா வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலை 20–9–2002 அன்று தேசிய நினைவுச் சின்னமாக அறிவித்து வெளியிட்ட அறிவிக்கையினைத் திரும்பப்பெற்ற அந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால், அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. கிரிவலப் பாதையில் இருக்கக்கூடிய அந்தப் பகுதி மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காகத்தான் இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல திரு. வேங்கடசாமி அவர்களைக் கலந்தாலோசித்து மேம்பாட்டுப் பணிகளைச் செய்யலாம் என்று சொல்லியிருந்தார்கள். 5 கூட்டங்கள் நடத்தப்பட்டு, உச்ச நீதிமன்றத்தினுடைய அறிவிப்பிற்கிணங்க அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால், அவர் மறைந்ததற்குப் பின்னால் மீண்டும் ஒரு consultant நியமனம் செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கை உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. இதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா வழங்க வேண்டுமென்று சொன்ன அந்தக் கோரிக்கையும் நிலுவையில் இருக்கின்றது. மிக விரைவாக உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலைப் பெற்று, நிச்சயமாக அந்த ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, கிரிவலப் பாதையில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்கான ஒரு கிரிவலக் குழு தொடுத்த வழக்கின் அடிப்படையில்தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும், இது தொடர்ந்து நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் இதை நிறைவேற்ற முடியவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.